தொகுதி-௫௫

பகுதி-௨

Vol. 55

No. 2

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1990
விகாரி-வைகாசி
May-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. அந்தாதியிலக்கியம்
பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் 29
2. கலை கலைக்காகவே
நா. பாலுசாமி எம். ஏ. 35
3. நெடுங்கிள்ளி
மு. உலகநாதன், 37
4. வாழ்வியல் நுட்பங்கள்
கு. மா. திருநாவுக்கரசு 43
5. நற்றிணை அரசப்புலவர்
நா. இராமையாபிள்ளை B. O. L. 48
6. செழுந்தமிழ்
அமுதநிலன் 52
7. உலகச் சமயங்கள்—கி. பழநியப்பன் 53
8. சங்கச் செய்திகள் 57

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A, (Bar-at-Law) M. L C,
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T. Ph. D. தமிழ்த்துறைத் தலைவர் தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. திரு. பேராசிரியர், பி, சோதிமுத்து, M. A., B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்–மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா, திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு	திருவள்ளுவர் ஆண்டு 1990 விகாரி—வைகாசி 1959—May	பகுதி. உ
Vol. 55		No. 2.

அந்தாதியிலக்கியம்

(பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர், தக்கலை)

(16-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பிள்ளைத்தமிழ் கலம்பகம் அந்தாதி முதலியவற்றுள் பலவும் பிற்காலத்தில் எழுந்த இலக்கியங்களாம் என்பது வாய்ப்புறு புலவர் வகுத்திடுங் கருத்தாம். அஃது ஒக்கும். ஆயினும் அவற்றுள் பல கடைத் தமிழ்க்கழகக் காலத்தும் அதன் முன்னரும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. (பன்னிரு பாட்டியலில் எடுத்துக் காட்டுச் சூத்திரங்களாக வந்துள்ளவற்றில் பலவும் கடைத்தமிழ்க் கழகச் சான்றோர்களாலும் அவர்க்கு முன்னுள்ளோராலும் இயற்றப் பெற்றனவாகத் தெரிகின்றன. அச்சான்றோர் ஆவார், சேந்தம்பூதனார், கோவூர்க்கிழார், பொய்கையார், மாமூலனார், பரணர், கபிலர், கல்லாடனார், இந்திரகாளியார், அவிநயனார் முதலியோர். ஆகவே சில பிரபந்தங்கள் பிற்காலத்தனவை என்று கொள்ளத்தகுமாயினும், பண்டைக் காலத்து இலக்கியங்களுக்கு உரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் இருந்தன என்று கொள்ளவேண்டும். வெண்பாப் பாட்டியலுரையில், 'இஃது எந்நூல் வழித்தோ எனின், இந்திரகாளி என்னும் பாட்டியன் மரபின் வழித்து' என்று கூறுவதனாலும், பன்னிருபாட்டியலில், 'முன்னோர் பொருள்நெறி கூட்டி உரைப்பல் பாட்டியல் மரபே' என்று கூறுவதனாலும், பண்டைக் காலத்தும் பாட்டியல்கள் இருந்தன என்பது செவ்வனம் பெறப்படும்.

('முன்பிற் செய்யுள் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே'

என்பது அகத்தியர் பாட்டியல் எனப் பன்னிரு பாட்டியலில் காணப்படுகின்றது. இஃது உண்மையாயின், அகத்தியரால் செய்த பாட்டியலும் உண்டு என்று கருதல் ஆகும்.)(தொல்காப்பியரும், அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என்பனவற்றிற்கும், புறநிலை வாழ்த்து வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ அங்கதம் பரிபாடல் பண்ணத்தி முதலிவற்றுக்கும் இலக்கணம் கூறுவதனாலும், அவற்றுக்கு உரிய பாட்டியல் மரபுகள் இருந்திருத்தல் கூடும் என்பது உணரப்படுகின்றது. அன்றியும், 'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே' என்னும் சூத்திரத்தில் பாட்டு எனப் பிரித்துக் காட்டுவதனாலும்,

"மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே"

என்ற தொடர்நிலைச் செய்யுளைக் கூறுவதனாலும்,

"அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருண்முடி யத்தந்தன ருணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

எனப் பாட்டியலைப் புலப்படுத்துவதனாலும், ஆற்றுப்படை களவழி முதலியவற்றின் இலக்கணம் கூறுவதனாலும் தமக்குக் கூறப்பெற்ற பாட்டியல் மரபால் பாடப்படவேண்டுந் தனிப்பட்ட பாடல்கள் இருந்தன என்பது நன்கு பெறப்படுகின்றது.) தொல்காப்பியர் அவற்றைப் 'பாட்டியல்' எனத் தனிப்பட வகுத்துத் தனி இலக்கணம் கூற்றிலர் ஆயினும், அவற்றுக்கு உரிய இலக்கணம் பற்றிப் பிறர் பாட்டியல் செய்திலர் என ஒருதலையாகக்கூறல் பொருந்தாது. அகத்தியருடைய மாணக்கர் பன்னிருவரும் பாடியபாட்டியல் ஒன்றுஉண்டு என்று கேட்கப்படுகிறது.

"விருந்தே தானும்,
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் புதிதாகப் படைத்துத் தொடர்நிலைச் செய்யுள் செய்வதென்றும் பொருள் தருதலின், அவை முத்தொள்ளாயிரமும் பின்னுள்ளார் பாட்டியன் மரபிற்

கூறிய கலம்பகச் செய்யுள் முதலியவற்றைப் பாடுதலுமாயிற்று' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருப்பதும் ஈண்டுக் கருதற்பாலது. இதனால், பாட்டியன் மரபு முன்னர் வழக்கில் இருந்தது என்பதும், இலக்கியம் கண்டு பிள்ளைக்கவி கலம்பகம் முதலியன பிற்காலத்துப் பாட்டியல்களில் சேர்க்கப்பெற்றன என்பதும் நன்கு விளங்குகின்றன.

பிரபந்தங்களில் அந்தாதி என்பதொன்று தொல்காப்பியர் காலத்து அல்லது அதற்குமுன் தனிப்பட்டதொரு இலக்கியமாக வழங்கிற்று என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. தொடை வகைகளில், அந்தாதித்தொடை பிற்காலத்து யாப்பிலக்கண நூல்களால் கூறப்பட்டுள்ளது. 'அந்த முதலாத் தொடுப்பதந்தாதி' எனச் சீரிய செந்தமிழ்க் காரிகை கூறுகின்றது. 'ஈறு முதலாத் தொடுப்பதந்தாதி யென்றேதினர் மாதோ உணர்ந்திசி னோரே' என நீப்பரும் பெருமை யாப்பருங்கலம் கூறுகின்றது. இங்குக் கூறிய அந்தாதி ஒரு செய்யுளில் ஓரடியின் இறுதி அடுத்த வடிக்கு முதலாய் வரத் தொடுப்பதாம். தொல்காப்பியனார் அந்தாதித்தொடை கூறிற்றிலர். ஆயினும், நச்சினார்க்கினியர்,

'பொழிப்பும் ஒரூஉவுஞ் செந்தொடை மரபும்
அமைத்தனர் தெரியின் அவையுமா ருளவே'

என்னுஞ் சூத்திரத்துக்கு எழுதிய உரையில், 'அவையும் என்னும் உம்மையை எச்சப்படுத்திப் பிறவும் ஓரடிக்கண்ணே வருவனவும் உளவெனக் கொள்க. அவை முற்றெதுகையும் கிளை முற்றெதுகையும் இரண்டந்தாதியும் இருவகை நிரனிறுத் தமைத்தவும் விட்டிசையுமாம்' என்று கூறினர். இரண்டந்தாதி ஆவன அசையந்தாதியும் சீரந்தாதியுமாம். அசையந்தாதி ஆவது பாட்டின் ஓரடியில் இறுதி நின்ற சீர் அடுத்த அடிக்கு முதலாய் வருவது. சீரந்தாதி ஆவது, பாட்டின் ஓரடியில் இறுதி நின்ற சீர் அடுத்த அடிக்கு முதலாய் வருவது. இங்கு இறுதி நின்ற சொல் கருதப்படவில்லை என்று அறிதல் வேண்டும்.

இவ்வந்தாதித் தொடையே ஒரு பாட்டின் இறுதி அடுத்த பாட்டுக்கு முதலாகத் தொடுக்கப்படும் செய்யுளந்தாதிக்கு அடிப்படை என்பது விளங்குகின்றது.

செய்யுளந்தாதியால் வரும் அந்தாதியிலக்கியம் கடைத் தமிழ்க் கழகக் காலத்துக்குச் சிறிது முன்னரே வழக்கில் இருந் திருக்கவேண்டும் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பிற இலக்கியங்களிலும் செய்யுட்களை அந்தாதித்துப் பாடும் வழக்கம் இருந்தது என்பது, எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய பதிற் றுப்பத்தில் நான்காம் பத்துப்பாடல்கள் முழுவதும் அந்தாதியாக அமைந்து இருப்பதனுல் நன்கு விளங்கும். உதயணன் காதை என்னும் பெருங்கதைப் பாடல்கள் அந்தாதியாக அமைந்திருக் கின்றன. கடைத் தமிழ்க் கழகப் புலவர்கள் ஆகிய கபிலர், பரணர், நக்கீரர் என்பார் சிவபெருமான்மீது பாடியுள்ள அந் தாதிகள் கி. பி. முதல் நூற்ருண்டுக்கு முன்னரே அந்தாதி யிலக்கியங்கள் இருந்தன என்பதற்குச் சான்று பகரும், கபிலரும் பரணரும் பாடியவை சிவபெருமான் திருவந்தாதி என்னும் பெய ரால் வழங்குகின்றன. நக்கீரர் பாடியது கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி என்பதாம். பொய்கையாழ்வார் கடைத் தமிழ்க் கழகத்துப் பொய்கையார் என்னும் புலவரே யாவராயின், அவர் பாடிய முதல் திருவந்தாதியும் கி. பி. முதல் நூற்ருண்டை அடுத் துத் தோன்றியதாகக் கொள்ளத்தகும். பந்தன் என்னும் வணி கன்மேல் ஒளவையார் பாடிய பந்தனந்தாதியும் அக்காலத்ததே. இக்காலத்துப் பந்தனந்தாதி என்று வழங்குவது ஒளவையார் பாடியதாகக் கொள்வதில் ஐயப்பாடுகள் பல நிகழ்கின்றன. காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியும், சேர மான்பெருமாள் பாடிய பொன்வண்ணத்தந்தாதியும் பூதத்தாழ் வாரும் பேயாழ்வாரும் பாடிய இரண்டாந் திருவந்தாதியும் மூன் ருந் திருவந்தாதியும் ஏறத்தாழ ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கொள்ளத்தக்கன ஆகும். பட்டினத்தார் செய்த திருவேகம்பமுடையார் திருவந்தாதியும் அச்காலத்தை அடுத்துத் தோன்றியதாகக் கொள்வர். திருமழிசையார் பாடிய நான்முகன் திருவந்தாதி சிறிது பிற்பட்டதாகலாம்.

கபிலர், பரணர், நக்கீரர் என்பார் செய்த அந்தாதிகளின் மொழி நடையை நோக்கி அவை அவரால் செய்யப்பட்டன அல்ல என்பாரும் உளர். கடைத் தமிழ்க் கழகத்துப் புலவர்

செய்த மேற்கணக்கு கீழ்க்கணக்கு நூல்களின் மொழிநடையை நோக்கி, அவரது பாடல்கள் எல்லாம் அந்நடையிலே இருக்க வேண்டும் என்று கொள்வது பொருந்தாது. அந்நூல்களினுள்ளும், நற்றிணை நடைவேறு. குறுந்தொகை நடைவேறு. ஐங்குறுநூற்று நடைவேறு. அகம் புறம், கலி இவற்றின் நடைகளும் வேறு. ஒவ்வொரு தொகையும் நடை பாட்டியல்பு முதலியன நோக்கி அமைக்கப்பெற்றிருப்பது நன்கு ஆராய்ந்தால் விளங்குவது ஒன்ருகும். இதனுல் புலவர் ஒருவரே வேறு வேறு நடையில் பாடும் இயல்புடையவரா யிருக்கின்றனர் என்பதும் பெறப்படும். பதிற்றுப்பத்து பரிபாடல், இவற்றின் மொழிநடை இதனை நமக்கு நன்கு விளக்கிக் காட்டும். இதனுல் கழகப் புலவர்கள் அரிய நடையிலும் எளிய நடையிலும் பாடும் இயல்புடையவர் என்பது பெறலாகும். இக்காலத்து நிகழும் உலகியற் சொற்களில் பெரும்பாலன அக்காலத்தும் வழங்கினவேயாகையால், அப்புலவர்களும் அவற்றை அறியாதவர் அல்லர். கல்லாதாரிடத்தும் அவர் கழகத் தமிழ் நடையிலே பேசினுர் என்பது ஒவ்வாது. தொகை நூல்கள் முதலியவற்றில் வடசொற்கள் பல நீக்கப்பட்டன ஆயினும், அவ்வடசொற்களில் பல வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஒரு நூலில் காணப்படாத வடசொற்களைக் கழகக்காலத்துப் பிறநூல்களில் காண்கிருேம். திருக்குறளில் வந்துள்ள பாக்கியம் என்னும் வடசொல் கழக நூல்கள் எல்லாவற்றினும் வந்துளதன்று. ஆகவே. வட சொற்கள் மிகுந்து காணப்படுவதுபற்றி அவ்வந்தாதிகள் நக்கீரர் முதலியோர் இயற்றியவை அல்ல என்று கொள்வது பொருந்தாது. வட சொற்களை வினைப்படுத்தி உரைப்பதும் தொல்காப்பியத்தில் மொழிக்கு முதலில் வரும் என்று கூறப்படாத சொற்களை வழங்குவதும் புதியனவாய்ப் புகுந்தனவே. ஆகும், இலக்கண விளக்கங்காறும் தோன்றிய இலக்கண நூல்கள் இக்காலத்தார்க்கு இலக்கணமாக இருந்தும், அவற்றில் கூறப்பட்ட இலக்கணவரம்பில் நின்றும் இகந்தனவற்றை இக்காலத்தார் வழங்கிவருவதை நாம் பார்க்கின்ருேம். ஆகவே, நக்கீரர் முதலியோர் யாவர்க்கும் பயன்படுமாறு தெய்வ வாழ்த்

தாய்க்கூறிய அந்தாதி முதலியவற்றில் கழகத் தமிழ் நடையை மேற்கொண்டிலர் என்பதை நாம் உணர்தல் வேண்டும். திருமுருகாற்றுப்படை கற்றுரைக் கண்ணியதாதலால், அதன் நடை கழகத் தமிழ்நடையாய் அமைக்கப்பெற்றுள்ளது. பத்துப்பாட்டு மொழி நடைமுழுவதும் ஏறத்தாழ ஒருபான்மைப்பட்ட நடையாக விளங்குகின்றது. தொகை நூல்களிலும் ஒவ்வொன்றிற்கு ஒவ்வோர் நடை அமைந்துள்ளது என்பதை முன் கூறினோம். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களின் நடை வேறு வேறு இயல்பில் ஒழுகுகின்றது. சேந்தம்பூதனரது இனியவைநாற்பதும் கபிலரது இன்னாநாற்பதும் தொகை நூல்களிற் காணப்படும் அவரது செய்யுள் நடைக்கு வேறுபட்டு எத்துணை எளிய நடையை உடையனவாயிருக்கின்றன?

அந்தாதி யிலக்கியங்கள் யாதானும் ஒரு பொருண்மேல் பாடப்படல் ஆகும் என முன்னே கூறிப்போந்தாம். கிடைத்துள்ள அந்தாதிகளில் பெரும்பாலன கடவுளரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப்பெற்றவை. சில மக்களைப் பாட்டுடைத்தலைவராக வைத்துப் பாடப்பெற்றவை. சில இலக்கணம் பொருளாகப் பாடப்பெற்றவை. இவையன்றி இலக்கியங்களும் இலக்கியப்பகுதிகளும் அந்தாதிப் பாடல்கொண்டுள்ளன என்பது முற்கூறப்பட்டது. தோத்திரப்பாடல் தொகுதிகளும் சில அந்தாதித்துப்பாடப் பெற்றிருக்கின்றன.)

கந்தரந்தாதி, அழகரந்தாதி, பொன்வண்ணத்தந்தாதி, அற்புதத் திருவந்தாதி, கைலைபாதி காளத்திபாதியந்தாதி முதலியன கடவுளர்மேல் பாடப்பெற்றவை. பந்தனந்தாதி, திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, சடகோபாந்தாதி முதலியன மக்கள்மேல் பாடப்பெற்றவை. வெண்பாப் பாட்டியல் (வச்சணந்திமாலை) முதலியன இலக்கணம் பொருளாகப் பாடப்பெற்றவை அந்தாதியாகப் பாடப்பெற்ற இலக்கியங்கள் பதிற்றுப்பத்தில் நாலாம்பத்து, உதயணன் காதை முதலியன. சேதுராயர் திருவிசைப்பா, (10 பாடல்) புருடோத்தம நம்பி திருவிசைப்பா (1 பாடல்) திருவாய்மொழி, கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பதிகம் முதலியன அந்தாதித்துப் பாடப் பெற்ற தோத்திரப்பாடல் தொகுதிகள். (தொடரும்)

கலை கலைக்காகவே

பேராசிரியர் நா. பாலுசாமி எம். ஏ.,

(54-ஆவது தொகுதி 316ஆம் பக்கத்தொடர்ச்சி)

அதுபோன்றே ஒருகலை அதனை அனுபவிக்கும் ஒருவனுக்கு எத்தகைய அழகுணர்ச்சியையும் இன்பவுணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது என்பதை நோக்காமல், அஃது அவன்றன் வாழ்க்கையை எந்த அளவுக்குச் செந்நெறியில் செலுத்துவதாக உள்ளது என்பதனையே கருதுதல்வேண்டும். தீய உணர்ச்சிகளுக்கு இருப்பிடமாயமையும் கலைகளினும் கலைகள் இல்லாமற் போதலே பெரிதும் நன்மை பயப்பதாம். கலை ஓர் இன்பப் பொருள் மட்டுமன்று. அது பல்வேறு மக்களையும் உணர்ச்சி வாயிலாக ஒற்றுமைப்படுத்தவும், மனித இனத்தை முன்னேற்றப் பாதையை நோக்கிச் செலுத்தவும் வல்லது. 10-ஆம் நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளரான எச். ஜி வெல்ஸ் (Wells) என்பார். ஓர் எழுத்தாளர் வறிதே தன்னைக் கலைஞர்களோடு மட்டில் ஒப்பவைத்து மதிக்காமல் தன்னை மக்களினத்தின் மாட்சி மிக்க ஆசிரியனாகவும், சமயப் பெரியோனாகவும், மெய்யறிவாளனாகவும் கருதித் தொழில்படுதல் வேண்டும் என்றார். கலை கலைக்காகவே என்பது பற்றிக் கருத்துரையருளிய பெர்னாட்ஷா அக்கொள்கையை முற்றிலும் வெறுத்தொதுக்கினார். ஒரு நல்லகலை, கலைக்காகவே ஆக்கப்படுவதில்லை. அங்ஙனமாயின் அக்கலைஞன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எத்துணை வீணானவை. சாமர்செட்மாகம் என்பவர் இக்கால எழுத்தாளருள் ஒருவர். அவர் கூறினார்: இலக்கியத்தின் அல்லது கலையின் மதிப்பு அதன் அழகில் அமைந்து கிடக்கவில்லை, அது மக்களுள்ளத்தே விளைவிக்கும் நல்ல எண்ணத்தையும், புறத்தே தோன்றச் செய்யும் நல்ல செயலையும் பொறுத்ததே. எனவே இலக்கியம் அதன் பயனால் மதிக்கப்பட வேண்டுமேயன்றிப் பிறிதொன்றால் அன்று.

இதுகாறும் கலை கலைக்கே எனும் கொள்கையை ஒட்டியும் வெட்டியும் தோன்றிய கருத்து மாறுபாடுகளைக் கண்டோம். இனி இவ்விருசாரார் கூற்றுக்களையும் ஒப்பவைத்து மதிப்பீடு செய்து ஒரு முடிவுக்கு வருவோம்.

கலை கலைக்கே என்னும் கொள்கையினர் தொடுக்கும் வாதம் உள்ளத்தைத் தொடுவதாக இல்லை. இதுபற்றி லூகாஸ் (Lucas) என்பவர் 'இலக்கியமும் உள இயலும்' என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்; "கலை கலைக்கே என்று கொள்பவர். கொள்கையளவிலும் நடைமுறையிலும் ஏற்புடைய கருத்துக்களைக் கூறுகின்றார் அல்லர். ஆயின், அது காரணமாக அவர்களை முற்றிலும் விலக்குவது நேரிதன்று, தவறு அவர் தம் கொள்கையில் உளது என்பதினும், அவர்கள் கூறும் முறையில் உளது எனல் சாலும். கலை அல்லது இலக்கியம் ஒழுக்க நூலிலிருந்து வேறுபட்டியங்கும் ஒரு தனித்துறையாகும். அதனை ஒழுக்கத்தோடு தொடர்பு படுத்திக் கூறும் முகத்தால் வேண்டாவிளைவுகளை அவர்கள் உண்டாக்குகின்றனர்"

இனி, கலை ஒழுக்கத்தைப்போதிப்பதற்காகவே உள்ளன என வரைந்து கூறும் ரஸ்கினுடைய வாதமும் ஒரு சார்புடைத்தே யாகும். ஏனெனில், ஒழுக்கவுணர்வு அல்லது அறவுணர்ச்சி வாழ்க்கையின் தத்துவத்தை உள்ளவாறு உணராமையே ஆகும். எடுத்துக்காட்டாகத் திருக்குறளைக் காண்க. அந்நூலில், வாழ்க்கையின் அறக்கூறுபாடுகள் பெரிதும் விளக்கப்படுகின்றன. எனினும், அவற்றை விளக்குமுகத்தால் படிப்பவருள்ளத்தே கலையுணர்வு ஒருங்கே தோன்றி இன்பம் பயப்பது கண்கூடு, எனவே, கலை, ஒழுக்கம் ஆகிய இரண்டும் எதிரெதிரே இணைந்து செல்லும் இணைகோடுகள் போலாது, ஒன்றையொன்று ஊடுருவிப் பாயும் குறுக்கு வெட்டிகளைப் போன்றவை என உணரலாம்.

(தொடரும்)

நெடுங்கிள்ளி

(மு. உலகநாதன்)

(28–ஆம் பக்கத்தொடர்ச்சி)

இளங்: சொன்னதில் தவறென்? சோழ நாடா!
என்னுரை தன்னில் என்பிழை கண்டாய்?

நெடுங்: நிறுத்தும் புலவரே! நீரினி என்றன்
வெறுப்பிற் காளர். வீணனின் புகழை
என்முன் விளம்பீர்! இதுவரை உம்மைப்
புலவர் என்றதால் போற்றினேன்! இனி என்
நிலைமை மாறின் நீரென் கைதி.

இளங்: உண்மையைச் சொன்னேன். சொன்னதில் உனக்கே
எண்ணம் இலையெனின் என்பிழை யன்றுகாண்!
எங்கள் தொழிலே ... ...!

நெடுங்: இதுதான் பிழைப்போ?
ஆ! ஆ! என்ன! ஆணவம் உனக்கே?
ஓ! ஓ! உன்னை ஒண்டமிழ்ப் புலவன்
என்றே எண்ணிய தென்பிழை உண்மை!
என்னே மடமை! என்னே மடமை!
பசுவின் தோலுள் புலியின் உருவம்.
கசடன்! எங்கள் காவலின் திறத்தை
அறிந்திட வந்துளாய்! அறிந்தேன்! அறிந்தேன்!
ஆ! ஆ! அங்கே யாரவன் அடியாள்?
வா! வா! சீக்கிரம் வந்திவண் புலவன்
என்றே நம்மை ஏய்த்துப் படைபல
நன்றிறம் அறிந்து 'நலங்கிள்ளி' தனக்கே
உண்மை யாளனாய் உளவை அறியுமிப்
பண்பில் மகனைப் பைந்தமிழ் தன்னைக்
கற்றோன் எனச்சொலும் கயவனைச் சிறையிடு!
ஒற்றனைப் புலவனை உலகினில் காணேன்,
கீழ்மை! கீழ்மை! செல்! செல்! கண்ணகல்!

இளங்: வாழ்க! 'நெடுங்கிள்ளி!' வாழ்க! நெடுநாள்
கடமையில் தவறினாய், காலம் உணர்த்தும்.

(3)

(கோவூர்க்கிழார் சோழன் நலங்கிள்ளிக்கு அறிவுரை கூறி நெடுங்கிள்ளிமேல் கொண்ட பகைமையை நீக்கும்படி வேண்ட நலங்கிள்ளி மறுத்துவிடல்.)

நலங்கிள்ளி: கோவூர்க் கிழாரே! குறிப்பிதைக் கேளும்
ஆவூர் நமக்கே ஆதியாய்ச் சொந்தம்
நெடுங்கிள்ளி நமது நெடுநாள் பகைவன்
மடையன் அன்னான் மதிலுள் இருந்தே
அடைத்துளான் கோட்டையை அதனால் கோட்டையை
விடுப்பது அவன்பால் விவேகம் அன்று!
படையோ நம்மிடம் பரந்துள வென்றிடத்
தடையெதும் இல்லை! தமிழ்மேல் ஆணை!
எனக்குள நாட்டை எப்படி விடுப்பது?
கனவிலும் ஒவ்வேன்! கனவிலும் ஒவ்வேன்!
யாரது அங்கே? அமைச்சரை வரச்சொல்!

அமைச்சர்: வணக்கம் மன்னவா! வாழ்கநின் கண்ணி!

நலங்: அமைச்சரே! உடனே அணிஅணி யாக
இமைநொடி தன்னில் நெடுங்கிள்ளி இருக்கும்
ஆவூர் தன்னை அடைத்து நிற்கக்
காவல் இடுக! கணக்கதாய்ச் செய்க!
ஏவல் இன்றி எந்தப் பொருளும்
ஆவூர் செல்ல அனுப்புதல் கூடா!

அமைச்: ஆணை மன்னா! தானைகள் சூழ்ந்தன!

கோவூர்க்கிழார்: என்ன மன்னா! இவ்வள வாத்திரம்?
என்னிது செய்தாய்? எண்ணினாய் இல்லை!
சோழனே நீயும் சோழனே அவனும்
ஆத்தியே சூடினாய் அவனும் சூடினான்!
உன்குலம் தானே அன்னவன் குலமும்!

என்சொலைக் கேட்பாய். இருவரும் வெல்லல்
உலக இயற்கையில் ஒருநா ளுமிலை
இலைஇதில் வெற்றி எவர்தான் பெறினும்
சோழர் குடிக்கே சொல்லொணாப் பழியாம்.
ஆழநீ சிந்தி! அதன்பின் போரினை
விட்டொழி அதுவே வெற்றி யாகும்
எட்டிய அறிவால் இதனைச் சொன்னேன்
பின்னுன் விருப்பம் ... !

நலங்: பெரும! வருந்துவன்
என்னுளம் இனிமேல் எதனையும் கேட்கா!
பழியது சூழேன்! பகைவனைக் களத்தில்
அழிப்பதே ஆண்மை! அதுவே வீரம்.
கொடும்புலி 'நலங்கிள்ளி' கோழை அன்று!
வடுப்படேன்! தோல்வியை ஊரவர் வாழ்த்தென
வசைமொழி யாக்கிடின் வரைவின் மகளிர்
மிசைதோள் கிடந்து மீளே னுகுக!
உறுதி கவிஞரே! உறுதி! உறுதி!

கோவூர்: சரி! சரி! மன்ன! சரியல வருகிறேன்!

(4)

(ஆவூரை அடைத்து நின்று பின் உறையூரை அடைத்து நின்ற 'நெடுங்கிள்ளி'யைக் கோவூர்கிழார் எதிர்ப்பட்டு அறவழியைக்கூறி 'இளந்தத்தன்' என்னும் புலவரை விடுவித்தல்.)

நெடுங்கிள்ளி: கோவூர்க் கிழாரா! கூறி அனுப்பின்
ஏவன் மகனாய் எதிர்வந் திருப்பனே!
நல்லது புலவரே! நலமெலாம் எப்படி?
தொல்லைகள் ஏதும் ... ?

கோவூர்: இல்லை! இல்லை!
நலமே மன்ன! நலமே வாழி!
பலகலை வல்லோய்! பைந்தமிழ் கற்றோய்!
குறையது ஒன்றைக் கொண்டனை என்றே

அறிந்தே இங்குநான் அப்பழி நீக்கிட
விரைந்து வந்துளேன்.

நெடுங்: விவரமாய்ச் சொல்வீர்!
பெரியீர்! என்ன பேசு கின்றீர்?
அறிகிலேன் ஒன்றும் அடியனின் தவற்றை
என்னென அதனை ஈங்குச் சொன்னால் ...

கோவூர்: மன்னவா! கேள்நீ! மாத்தமிழ் கற்றே
உன்னிடம் பரிசிற் குவப்புடன் வந்த
'இளந்தத்தன்' என்னும் இரவலன் புலவன்
உளவறி வானென உன்னால் காவலில்
வைக்கப் பட்டதாய் வந்தவர் சொல்லவே
அலைவுறும் மனத்தனாய் அடைந்தேன் உன்னை
கொலைசெய்வானோ நீயும்?

நெடுங்: குற்றம் செய்தவன்
கொலையுறல் தவறோ?

கோவூர்: கொலையுறல்தவறெனச்
சொலநான் வரவில்லை! சொல்வதும் குற்றம்;
குற்றம் என்ன? கொற்றவா! செய்தான்?
நற்றமிழ் கற்றான்; நற்றமிழ் கற்றதோர்
குற்ற மென்றால் கொலையினைச் செய்க!
எட்டுத் திக்கும் இரையினைத் தேடப்
புட்கள் பறந்து போவதைப் போலப்
புலவரும் பாவம் பொருளினைக் கொடுப்பார்
உலகில் எங்குளார் என்றவர் ஊர்பல
செல்லுதல் உண்டு சீர்மை யாளர்;
வல்லபாப் பாடி வாதிட வந்தோர்
தோற்றே ஓடிடச் சுற்றம் மகிழ்ந்திட
ஆற்றலால் பெற்ற அரும்பொருள் கொண்டு
வாழ்ந்திடும் மனத்தார் வஞ்சனை யில்லார்
ஏழ்மையின் புலவரை இருநீ அறிந்தவன்

ஒற்றன் என்றே ஒழித்திட எண்ணுதல்
கொற்றவன் நீதியில் கொடிதாம் அல்லவோ?

(சிறிது சிந்தித்துச் சிந்தனைக்குப்பின்)

நெடுங்; உண்மை அதுவோ? உண்மை அறிந்தேன்
தண்டமிழ்ச் செல்வ! தவறதால் வருந்துவேன்.
ஏய்! ஏய்! அங்கே எவனுளான்? சீக்கிரம்!
போ! போய் நமது புலவரை விடுதலை
செய்தவர் தம்மைச் சீக்கிரம் இட்டுவா!
மெய்ம்மை அறியேன்! யானுமோர் மன்னனோ?

கோவூர்: தவறிலை 'நெடுங்கிள்ளி!' தவறுதல் இயற்கை.
குவலயம் இகழும் இன்னுமோர் கொடுஞ்செயல்
கொண்டுளாய், அதனையும் கூறுவேன், கேட்பாய்!
அண்டம் நடுங்கும் யானைகள் தமக்கு
நல்லுண வின்றி நாட்டை அலைக்கவும்
பல்லில் பசுஞ்சிறுர் பாலிலா தழவும்
பூவையர் குழலில் பூவிலா திருக்கவும்
மக்கள் துன்புற மன்னன் இன்பமாய்
ஒக்கலோ டுங்குளாய்! உனக்கிது தகுமோ?
'ஆவூர்' உனதெனில் அடைமதில் திறந்தே
'ஆவூர்' எனதென அறிக்கை விடுக்க!
அன்றேல் போரில் அறமதைக் காத்துநீ
என்னதே நாடென இழிபெயர் துடைத்திடு.
இரண்டும் இன்றி இப்படி மக்களை
வருந்தித் துன்புற வாட்டுதல் கூடா.
என்செயப் போகின்றாய்? இரண்டில் ஒன்றுசெய்!
ஒன்றும் நன்றுசெய்! உலகுனை வாழ்த்தும்

நெடுங்: உண்மை புலவரே! உண்மை உரைத்தீர்!
எண்ணமும் அதுதான் இனித்துயர் இருக்கா.
போர்தான்! போர்தான்! போரினில் மீண்டு
யாருயிர் நிலைக்குமோ? அவர்க்கே 'ஆவூர்!'
சீக்கிரம் வாயில் திறப்பது காண்பீர்!

ஏக்கமும் அழுகையும் இனியிங் கிருக்கா.
வணக்கம் புலவரே! வணக்கம்! வணக்கம்!
இணக்கம் தானே என்செயல் தன்னில்?

(5)

(போர்முரசு ஒலிக்கின்றது. அப்போரிலே நெடுங்கிள்ளி உயிர் விடுகின்றான். அதன்பின் அவன் புகழ் புலவர் பலராலும் பாராட்டப்படுகிறது.)

புலவர்கள்:-ஆவூர் தன்னை அடைந்தே தீருவேன்
ஏவர் வரினும் ஈங்கிது உண்மை!
என்ற 'நெடுங்கிள்ளி' எண்ண மதனை
மன்னவன் 'நலங்கிள்ளி' மாய்த்து நின்றும்
அன்னவன் தன்னை ஆவூர் விடுத்தே
தொன்மை 'உறையூர்' சேர்ந்திடத் துரத்தியும்
அங்கும் வாழ்ந்திட அவனை விடாதே
பொங்கினான் 'நலங்கிள்ளி!' போய்ப்பின் 'நெடுங்கிள்ளி'
'காரி யாற்றில்' கண்ணினை மூடினான்.
கொடுமை! கொடுமை! கொடுமையிற் கொடுமை!
அடுக்குமோ கூற்றுவன் அடாச்செயல்? இலை! இலை!
நிலமகள் அவனுடன் நித்திரை கொள்ளவே
கொலைப்படச் செய்தாள்! கோமகன் அவன்போல்
இனியொரு வள்ளல் ஈங்கினிப் பிறக்கப்
போவதும் இல்லை! பொன்பொருள் பரிசில்
யாவரே தருவர்? யாவரே அடைவர்?
ஆவூர் வேண்டியே ஆருயிர் நீத்த
மேவிய சிறப்பின் நெடுங்கிள்ளி மேன்மை
நிலமெலாம் பரவுக! நீடுபுகழ் வாழ்கவே!

(புறம்: 32, 33, 44, 45, 47, 73, 75, 225, 382, 400 ஆகிய பாடல்களைக்கொண்டு தழுவி எழுதப்பட்டது.)

வாழ்வியல் நுட்பங்கள்

(வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு)

(சென்ற இதழ் 16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் காட்டில் வாழும் வேறுசில விலங்கினங்களின் குணச் சிறப்பையும் அவைகள் அந்நிலத்துப்படும் அல்லலையும் பெருங்கடுங்கோ நுண்ணிதின் விளக்குந் திறம் போற்றற்குரியது.

காதற்றலைவன் செல்லும் காட்டில் சேர்ந்தவர்க்கு நிழலின்றி வாடிய சினைகளைக்கொண்ட மரங்கள் மட்டுமேயுள்ளன. ஆத லின் புறுக்கூட்டங்கள் கூடுகட்டி வாழவுமியலாது வெம்மை யும் தாங்காது அலமருகின்றன. அந்நிலையிலும் தனது மடப் பேடை வருத்தமடையக் கூடாதே எனக் கருதி ஆண் புறு தனது சிறகால் வீசிப் பெண் புறுவின் வருத்தத்தைப் போக்கும் பெரும் பண்பினைக் கண்டு வியப்புறுதார் யாருளர்?

"அக்காட்டுள்
அன்புகொள் மடப்படை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே."
(கலி-11)

அதைப்போலவே அக்காட்டில் நிழலின்மையால் வருந்தி வாடும் பெண் மானுக்கு ஆண் மான் தனது நிழலைக்கொடுத்து ஞாயிற்றின் வெங்கதிர் படாமல் காத்துக்கொள்ளுங் காட்சியைக் கண்டோர் யாரும் கனிந்துருகுவர் என்பது உறுதியல்லவா?

'அக்காட்டுள்
இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே"
(கலி-11)

ஐயறிவுடைய விலங்கினங்களின் அரும் பெரும் பண்புதான் என்னே! இக்காட்சியை உன்ன உன்ன உள்ளம் உவகைகொள் கின்றது.

இனி, அவைகள் அக்காட்டில் படும் அல்லலையும் பார்ப் போம்.

கோடைத் தீயால் எரிந்து கரிபட்ட வறண்ட பாலை நிலம். அங்கு உண்ணத்தக்க உணவு எதுவுமில்லை. ஆதலின் பொரி மலர்ந்தாற்போன்ற புள்ளிகளையுடைய மடமான், முறுக்கிய கொம்புகளையுடைய தனது கலைமானோடு கானல் நீரைக்கண்டு ஓடி அலைந்து திரிகின்ற அவலக் காட்சியைக் கண்டால் யாருடைய உள்ளந்தான் கசிந்துருகாது?

> "எரிவெந்த கரிவறல் வாய்புகுவ காணைப்
> பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
> திரிமருப் பேறொடு தோறற் கோட" (கலி-13)

தலைவியை விட்டுப் பிரியும் எண்ணத்தனாயினன் தலைவன். அதனையறிந்த அவள் அவனிடத்து "என்னை நீ உடன்கொண்டு செல்ல வேண்டாம். ஆனால் நான் கட்டிப் பிடித்தாலும் என்னிடத்தில் நில்லாமல் உன்னோடு ஓடி வருகின்றதே என்நெஞ்சு! அதனை நீ வைத்து ஓம்புமின்" எனக் கூறுகின்றாள். இவ்விடத்தில் கவிஞர் கல்மனமும் கசிந்துருகும் வண்ணம் ஓர் உவமையைக் கூறுகின்றார். "ஒரு வேட்டை நாய் கொன்று தின்னுங் கொள்கையோடு ஓடி அலைந்து திரிந்து ஒரு மானைப் பிடிக்க, அம்மான் அந் நாய்க்குப் பயன்படாமல் வேடர்க்குப் பயன்பட்டதாம். அம்மானை யொத்துள்ளது அத்தலைவியின் நெஞ்சு' எனக்கூறுகின்றார். பிரிந்து செல்லும் தலைவன், தலைவியின் மனம் வருந்தி அவளை விட்டு நீங்கி அவன் வழிச்செல்லும் நிலையை அவள் கூற்றால் அறிந்திருப்பினும், அவளுக்குச் சிறிது ஆறுதல் கூறிப் புறப்பட்டு விடலாமல்லவா? ஆனால் செல்லும் வழியில் ஒரு மான் இவ்வாறு படும் அல்லலைக் கண்டால் பிரிந்து செல்லத்துணியான். எனவே அவன் கண்ணில் படும் ஒரு பொருளின் துன்ப நிலையைக் காட்டி அவள் படுந் துன்பத்தை எடுத்துச் சொன்னால் தான் அவனுடைய பிரிவும் நிறுத்தப்படும். அவளும் இன்பமாய் வாழ்வாள்' என்பதை அறிந்த பெருங் கடுங்கோ ஏற்ற விடத்தில் இவ்வுவமையினை எடுத்தாண்டதோடு, மானினங்கள் நாயினால் பிடிக்கப்பட்டு வேடர்கட்குப் பயன்பட்டு வந்த வழக்கத்தையும் அழகுற அமைத்துள்ளார்.

கொலைவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல
நின்னுங்கு வருஉமென் னெஞ்சினை
என்னுங்கு வாரா தோம்பினை கொண்மே. (கலி-28)

மறவர் பண்பும் செயலும்

இதுவரை காட்டிலுறையும் விலங்கினங்களின் உயரிய பண்பையும் கோடைத்தீயால் படும் அல்லலையும் கண்டோம். இனி அங்கு வாழும் மறவரின் பண்பும் செயலும் எத்தகையன என்பதைப் பார்ப்போம்.

காட்டில் இயல்பாகவே உயரிய பண்பினைப் பெற்றிருந்த விலங்கினங்களின் வாழ்வை அழகுற விளக்கிய பெருங்கடுங்கோ அவற்றிற்கு மாறுனவற்றை உயிர்க்குணமாகப் பெற்றிருந்த மறவரது வாழ்வையும் தெளிவாக விளக்குகின்றுர்.

முதற்கண், மறவரது உருவமே கண்டார் அஞ்சும் காட்சியையுடையது. அம்மறவர் உடலுரமும் அதற்கேற்ற உறுதியான உடம்புமுடையவர்; புலிப்பார்வைபோலும் பார்வையினர்; முறுக்கிக் காட்டும் வில்லினர்; சுருண்டு வளர்ந்த மயிரினர்; வழிப்போவாரின் வருகையை எதிர் நோக்கிக் காத்துக் கிடப்பதே அவரது உயரிய பண்பு. அவர் நாடோறும் செய்யும் தொழில்தான் என்ன? வம்பலரிடத்தில் பொருள் இருந்தால் அவற்றைக் கடிதிற் கவர்வது; கவரக்கூடிய பொருள் எதுவுமில்லையெனின் அவ்வம்பலர் துன்பமுற்றுத் துடிதுடித்துக் கீழே விழவேண்டும்; அதனைக் கண்டு தாங்கள் மகிழவேண்டும்; அதற்காகவே அவரைப் பின் தொடர்ந்து அவரதுயிரைக் கவர்வது. இதுவே மறவர் நாடோறும் செய்யும் சீரிய தொழிலாம். என்னே மறவரின் மாண்பு! அவரது கொடுஞ் செயலைக்கண்டு பறவைகள் கூட அவ்வழியே பறப்பதற்கு அஞ்சிச் செல்லாவாம். கொடுமை! கொடுமை.!

"வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை" (கலி-4)

இவ்வாசிரியரே மற்றோரிடத்தில் அம்மறவரது பண்பினை மேலும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

கூரிய பார்வை; உருண்டு திரண்ட கழுத்து; கலைமானின் கொம்பைப்போல் முறுக்குண்டு திரண்ட தாடி; கடுஞ்சினம்: கடிய துடியினைக் கொண்டு செய்யும் ஆரவாரம் இவற்றையுடையார் எவரோ அவரே மறவர்—ஆறலைகள்வர்—எனக் கூறிவிடலாம். காவியத்தில் ஓவியத்தைக் காட்டும் கவியின் வல்லமைதான் என்னே! இன்னும் கவனியுங்கள்!

பகையரசர் பெரியதொரு படைகொண்டு போர்புரியக்கருதி வந்து மறவர்தமை வளைத்த காலத்து, சிலை மரத்தாற் செய்த தம்முடைய வலிய வில்லில் முறுக்குண்ட நாணிலிருந்து, சிங்கத்தின் முழக்கமொப்ப எழுப்புமொலி ஒன்றினாலே வலிமை கொண்ட அப்பேரரசை அஞ்சப்பண்ணித் துரத்தி வெற்றிகொள்வாரேயன்றி, அன்னவரை அழிக்கவெண்ணி அம்பினை ஏவும் நிலைக்கு நாணத்தைக் கைக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர் அம்மறவர். அன்னவரோ ஒருவகையில் வாணிகத் தொழில் புரியும் மாபெரும் தொழிலாளிகளேயாம். என்னை? ஒன்றினை ஒருவர்க்கீந்து மற்றொன்றை வாங்குவதுதானே வாணிகத்தின் இலக்கணம். அதன்படி அம்மறவர் வழிப்போவார் பொருளைப்பற்றி, அன்னவரைக் குத்தி அவர்தமக்குப் புண்ணைத்தரும் செயலுடையவர் ஆதலின் என்க. இதுவன்றி வேறெப்பண்பு அவரிடத்துக் காண இயலும்? ஆர்வலரின் புன்கண்ணைக் கண்டவழிக் கசிந்துருகும் அன்பையோ, அதுவன்றி அல்லார் மாட்டுறுகின்ற துயர்தம்மைப் போக்கும் உயர் அருளையோ அவரிடத்தில் காணவியலாது. கவிஞர் காட்டும் காவியத்தைக் கண்டுணர்ந்து சுவையுங்கள்!

"அரிமா னிடித்தன்ன அஞ்சிலை வல்விற்
புரிநாண் புடையிற் புறங்காண்ட லல்லால்
இணைப்படைத் தானை யரசோ டுறினும்
கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பின்
எருத்து வலிய எறுழ்நோக் கிரலை

மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
உருத்த கடுஞ்சினத் தோடா மறவர்
பொருள்கொண்டு புண்செயி னல்லதை யன்போ
டருள்புற மாறிய வாரிடை யத்தம்'' (கலி-15)

வழிப்போவார் செல்லுங்காட்டின் வழியோ சொல்லுந்தரமன்று; அவ்வளவு கொடுமை மிகுந்த வழி, மாரியும் பொய்த்தது; மரமும் கருகியது; நீரும் நீங்கியது இத்தகைய கடியதொரு நிலத்தில் [1] மரையாவும் தனக்குரிய உணவல்லாத [2] மரலையும் உண்ணவேண்டிய அளவுக்கு வறட்சி பெருகியது. இதுவே போதும் ஆண்டுச் செல்லுவோர் அவல நிலையைப் பெறுதற்கு. இதற்குமேலும் ஆங்கு நடைபெறுவதைப் பாருங்கள் ! ''வழியை எப்பொழுது கடப்போம்? குடிப்பதற்கு நன்னீர்தான் கிடைக்குமிட மெங்கே!'' என்றெண்ணி ஏக்கமுற்றுச் செல்வோரைக்கண்ட மறவர்தாம் அன்னவர்மேல் தம் அம்பைச் செலுத்துகின்றார். அவ்வம்பு அவருடம்பில் தைக்கின்றது. இயல்பான தளர்நடையோடு செல்லுகின்ற வழிப்போவார், மறவரின் கொடுஞ் செயலால் மேலும் தளர்ந்து, நீர் வற்றிப் போவதால் வறண்டுபோம் தம் நாவிற்கு நீர் பெற முடியாத தணியாத துன்பத்தை ''என் செய்ய இனி நாமே'' எனக் கலங்கி அழுது சிந்தும் கண்ணீரால் தம் நாவின் வறட்சிதனைப் போக்குகின்றார். ஐயகோ, பாவம் !

''மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடு'' (கலி-6)

இதைவிடக் கொடுமை வேறென்ன வேண்டியிருக்கின்றது? அக்காலத்தில் காட்டில் வாழ்வோர் வம்பலரை எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தினர் என்பதை இன்று காவியத்தில் கண்டாலும் மெய்ம்மயிர் சிலிர்க்க விதிர்விதிர்ப்பெய்தி கல்மனத்தோடும் கசிந்துருகுவரன்றோ ? (தொடரும்)

---

1. காட்டுப்பசு, 2. கற்றாழையைப்போன்ற ஒருவகைச் செடி.

நற்றிணை அரசப் புலவர்கள்

(வித்துவான் நா. இராமையா பிள்ளை, B. O. L.)

[54-ஆவது தொகுதி 329-ஆம் பக்கத் தொடர்ச்சி]

தோழி கூறக் கேட்ட தலைவி தன் நிலையை எடுத்துக்கூறத் தொடங்கினாள்.

"தோழி! நீ வாழ்வாயாக. எனக்கு வந்த நோய் எனக்கு அடங்காமல் பெரிதாய் இருக்கிறது. என் உடம்பும் தீயை உமிழ்வதுபோல வெம்மையாய் இருக்கிறது. இக்காரணத்தால் நான் ஒன்று உனக்குச் சொல்லுகிறேன். நீ கேட்டு நிறைவேற்ற வேண்டும். நரகம் போன்ற துன்பமாய் நமக்கு இப்போதிருக்கிற நம் அன்னையிடம் நீயே வலியச் சென்று ஒன்று சொல்ல வேண்டும். அஃது என்னவென்றால் "இவள் உயிரோடு இருக்க வேண்டுமென்றால், தாயே! முன்றிலிலே இவளைப் படுக்கவைக்க வேண்டும். அப்போதுதான் இவள் பிழைப்பாள்" என்று என்னைப் பற்றிச் சொல்லவேண்டும். ஏனென்றால் குற்றமற்ற நுண்ணிய வேலைப்பாடு அமைந்த நல்ல பிரகாசமான வளையலை நெகிழ்த்தவராகிய என் தலைவரது குன்றத்து வீசிய காற்று என் உடலில் படவேண்டும். தலைமையும் உயர்வும் உடைய அவரது மலையிலே திரிந்து குளிர்ச்சியாக எனது பசலை படர்ந்த மார்பில் அக்காற்றுச் சிறிது தீண்டினும் என் உடல் வெம்மையும் மன வெம்மையும் மாறும். எனவே இதனை எனக்காகச் செய்யவேண்டும்" என்று தலைவி வேண்டிக் கொள்கிறாள். (நற். — 236)

தலைவன் சிறைப்புறமாக விருக்கும்போது தன் துன்பத்தைத் தலைவனுக்குத் தலைவி அறிவிக்கும் முறை மிகவும் பாராட்டத் தக்கது. இவ்வாறு அறிவிக்கவேண்டுமென்றால் எவ்வளவு கல்வி வேண்டும்? சிந்தித்துப் பார்க்கலாம். இப்பாட்டைப் பாடியவர் நம்பி குட்டுவனார். முன்பு காட்டிய 145-ஆம் பாட்டையும் இவரே இயற்றியவர்.

அக்கால இளம் பெண்கள் தமது கற்பை நல்ல முறையில் காப்பாற்றிக்கொள்வர் என்பது சொல்லாமலே நன்கு விளங்கும். அதனோடு அன்னைமார்கள் தமது பெண்கள் இளமை காரணமாக யோசியாது தவறான வழியில் செல்லாதவாறு எவ்வளவு காப்புடையவராக இருந்தனர் என்பது இப்பாட்டின்மூலம் விளங்கும். ஒவ்வொரு நேரமும் தம் மகளைப்பற்றி ஒவ்வொரு தாயும் கண்காணிப்போடு இருந்தனராதலின் அஃது அவர்களுக்குத் துன்பமாய் அப்போதைக்குக் காணப்பட்டதாலேயே, அம்மகளிர் "நிரைய நெஞ்சத்து அன்னை" எனக் குறிப்பிடுவாராயினர்.

தலைவன் சிறைப்புறமாக இருந்தபோது தோழி தலைவியிடத்துச் சொல்லத் தொடங்கினாள்.

"தோழி! பெரிய கையையுடைய யானை அச்சங்கொள்ளத் தகுந்த வில்லால் எறியப்பட்ட அம்புக்குப் பயந்து பெரு முழக்கமிடும். அம்முழக்கத்தையும் அருவியையுமுடைய மலைகிழவோன் வந்து நம்மை அருளுவானே இல்லையோ? மின்னலால் இருளைப் பிளந்துகொண்டு இடியால் விண்ணை முழக்கிக்கொண்டு நடு இரவில் மேகம் மழையைப் பொழியும். அப்போது பண்பற்ற வழியில் நம்மை எண்ணி வரும் தலைவன் நிலையை எண்ணி நாம் வருந்துகிறோம். அவன் வாராவிட்டால் நாம் என்ன ஆவோம்?" என்று சொல்லித் தலைவனது இன்றியமையாமையைத் தோழி தலைவன் உணரும்படி எடுத்துக்காட்டினாள். பண்பில்லாத வழியில் வந்து நம்மைச் சந்திக்க விரும்புகிறவன் துன்பத்தை நீக்கி, இன்பமாக்கிக்கொள்ள வேண்டிய காரியம் அவன் கையிலுள்ளது. அதுதான் திருமணம் செய்துகொள்வது என்பது தோழியின் குறிப்பு. (நற்-228 முடத்திருமாறனார்)

தோழியும் தலைவியும் ஒன்றாய் இருக்கும்போது தலைவன் இருவரையும் சந்தித்தான். தலைவியின் வாடின முகத்தைப் பார்த்தான். "நான் விரைவிலே வரைந்துகொள்வேன். வருந்த வேண்டாம், அதுவரை ஆற்றியிருப்பாயாக" என்று கூறினான். உடனே தோழி குறுக்கிட்டாள்.

"துறைவ! கடற்கரைச் சோலையிலுள்ள கண்டல் மரத்தி லிருந்து பசிய காய் காற்றால் உதிர்ந்து பக்கத்திலுள்ள பெரிய கழியின் அடித்தலம்வரை போகும்படி வீழ்கிறது. அது வீழும் போது ஆம்பல் அரும்பில் மோதுகிறது. அடி வாங்கிய அரும்பு நீர்க்காக்கை கொட்டாவி விடுவதுபோல் மலருகிறது. அப்படிப் பட்ட துறையையுடைய தலைவனே! கேட்பாயாக, எப்போ தும் கருணை செய்வதையே இயல்பாகக் கொண்டவரும், நல்ல நட்பியல் கொண்டவரும் சால்பு என்னும் பெருங் குணத்தைக் கொண்டவரும் செம்மையான மனத்தைக்கொண்டவருமான உன்னைப்போன்ற பெரியவர்கள் ஆலோசிக்காமல் பிறர் மனம் புண்பட்டுவருந்த நீண்டநாள் விரும்பாமல் இருந்தார்களானால் அவர்களை நம்பியவர்கள் எப்படி வாழ்வது? வருந்துவோர் வருந்தித் தேய்வடையட்டும். நீ சொல்லும் தெளிவான வார்த் தையும் தேய்ந்து போகட்டும்" என்று குத்திப் பேசினாள்.

காற்றால் கண்டற்காய் வீழ்வதுபோல அலர் தூற்றுவதால் இவள் நாணம் வீழ்கிறது. கண்டற்காய் மோத ஆம்பல் அரும்பு மலர்வதுபோல நாணம் வீழ இவள் வாய்விட்டுப் புலம்ப வேண்டி வரும்—என்று குறிப்பிடுகிறாள் தோழி. "அளி, நட்பு, சால்பு, செம்மை என்ற குணங்களையுடைய உன்னைப்போன்ற பெரியவர்கள் பிறர் துன்பத்தைக் கருதாது நடப்பார்களானால்—என்பதில் நீயும் அப்படி நடக்கிறாய்" என்பது குறிப்பாகக்காட்டப் படுகிறது. ஆகவே" அளி, நட்பு, சால்பு, செம்மை உனக்கு இன் னும் தேவைப்படுகின்றன" என்று தோழி குத்திப் பேசினாள் எனலாம். இந்த நான்கு குணங்களையும் உடையார் பிறர் துன்ப மடையப் பார்த்திரார் என்பது உய்த்துணரத்தக்கது. இக்குணங் களையுடையார் விரும்பாராயின் எப்படி வாழ முடியும் என்று உலகின்மேல் வைத்துப் பொதுவாய்க் கூறித் தலைவனுக்குப் பொருத்தினாள் தோழி. இப்படி அரிய கருத்துக்களை அமைத்து நம்பி குட்டுவனார் என்ற அரசர் பாடியிருப்பது அறிவுக்குப் பெரும் விருந்தாகிறது பாருங்கள். (நற்–345)

தலைவனுக்கும் தலைவிக்கும் திருமணம் நடந்தது. இருவரும் இல்லறமாம் நல்லறம் நடத்தினர். இனிமையாய் வாழ்ந்தார்கள்.

தலைவன் பரத்தையிற் பிரிந்தான். ஒருநாள் பாணன் ஒருவனை வாயிலாக அனுப்பினான். பாணன் தலைவி யில்லத்தை அடைந் தான். அவனைக் கண்டதும் தோழி பேசத்தொடங்கினாள், அவ னிடமன்று தலைவியிடம்.

“நல்ல நுதலையுடைய பெண்ணே! அன்னைபோன்றவளே! கேள். ஒருநாள் நான் ஒரு பெரிய தெருவழியே சென்றுகொண் டிருந்தேன். நமது தலைவன் துணங்கையாடச் சென்றுகொண் டிருந்தவன் திடீரென்று என்னை நொதுமலாளன்போலச் சந் தித்து விட்டான். அவன் உனக்கு அஞ்சிக்குழையும் கோதையும் குறியபசிய தொடியும் அணிந்திருந்தான். கண்டேன். எனக்குச் சினம் வந்தது. ‘உன்னைக் கேட்பாருண்டா? இல்லையா? நீயே அறிந்தால் போதும்’ என்று கடுமையாக மொழிந்தேன். அவன் ‘பசலை அழகுடையது’ என்றான். அது கேட்ட யான் அவன் பகைவரும் விரும்புந்தன்மையுள்ள செம்மலான் என்பதை அறி யாது, என் வார்த்தையையும் அடக்காது, என் சிறுமை சினத் தின் பெருமையில் காணமுடியாது, துணிந்து, ‘‘எலுவ! நீ நாண முடையவனில்லை’ என்று சொல்லிவிட்டு வந்தேன்’’ என்றாள்.

‘செறுநரும் விழையும் செம்மலோன்’ என்ற தொடர் மிக வும் நல்ல தொடர். எத்தனைமுறை கூறினாலும் சலிப்புத் தட் டாது. தலைவியை ‘அன்னை’ என்ற சொல்லால் அழைத்தது ‘தாய்மை’ அவளிடம் வந்துவிட்டது என்று குறிப்பித்தாள் தோழி என்க. தம்மால் மதிக்கப்படுகிறவரிடம் தம் குறையை எடுத்துக்கூறும் முறை சாலச் சிறந்ததாய் உள்ளது. ‘கேட் போர் உளர்கொல் இல்லை கொல்; போற்று’ என்பதே அது. தலைவன் பெருமை அதே சமயத்தில் சிறுமை இவற்றை அழகா கத் தோழி கூறுகிறாள். பாணன் வந்தது தவறு என்று அவன் உணரும்படிச் செய்கிறாள். தான் சிறுமை உடையவள் போலக் காட்டுகிறாள் தோழி. இவ்வாறு பல கோணங்களையும் கருத்துக் களையும் ஒரே பாட்டில் அமைத்துப் பாடிய பெருமை மருதம் பாடிய இளங்கடுங்கோவைச் சேர்ந்தது (நற் 50). (பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற அரசப்புலவர் ஒருவர் உண்டு. அவரின் இவர் (மருதம் பாடிய இளங்கடுங்கோ) வேறானவர். அவர் பாலை பாடியதால் அவ்வாறு அடைமொழி பெற்றார். இவர் மரு தம் பாடியதால் இவ்வாறு அடைமொழி பெற்றார்போலும்.

(தொடரும்)

செழுந்தமிழ்

அமிழ்தநிலன்

ஹம்ஸத்வனி — ஆதி

எடுப்பு

அமிழ்தினும் இனித்திடும் செழுந்தமிழே
அழகொளிர் நின்புகழ் அள்ளிடும் என்னுள்ளம்

(அமிழ்தி...)

மேல்எடுப்பு

கமழ்தரு நறுமலர் சூடிடும் மகளிரின்
கற்பினைப் புகழ்ந்திடும் நூல்பல வருளிய

(அமிழ்தி....)

அமைதி

சினந்தவிர்ந் தெவரோடும் சீரிய முறையினில்
செல்வத்தோ டறத்தினைச் செழித்திடச் செய்நூல்
இனமிவர் மக்களில் எனும்புகழ் ஈந்தெம்மை
ஈடில் நிலையினில் இருத்திய பழந்தமிழ்

(அமிழ்....)

இரும்பெனும் உளத்தையும் உருக்கிடச் செய்நூல்
அறந்தரு வழியினில் வழுவற நிறுத்திடும்
பெரும்புனல் இலக்கியப் பேரின்பம் அருள்தரும்
கரும்பினும் கனியினும் சுவைத்திடும் பழந்தமிழ்

(அமிழ்...)

உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன்)

ஈரானியர் சமயம் (24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோராத்சருக்குப் பொருசித்தா என்று ஒரு மகள் இருந்தாள். அவள் மிக அறிவுடையவள். அவளுடைய அறிவுத் திறனைக்கண்ட அந்நாட்டு முதல் அமைச்சர் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினர். சோராத்சரும் பொருசித்தாவும் அதற்கு இசையவே இருவருக்கும் மணம் நடைபெற்றது. இவ்வாறு முதல் அமைச்சரை மருமகனுகக்கொண்ட சோராத்சரின் செல்வாக்கு நாட்டில் பன்மடங்கு உயர்ந்தது.

"நன்மைகளுக்கு முதல்வனுன அவுராமசுதா ஓர் ஊருக்கு மட்டும் கடவுளாக இருக்க முடியாது. அவர் உலகம் முழுவதற்குமே கடவுளாக இருக்கவேண்டும். ஆகவே, நமது கொள்கைகளை ஈரானிய நாடு முழுவதும் பரப்புவதன்னியில் பிறவெளி நாடுகளிலும் பரப்புதல் வேண்டும்" என்று சோராத்சர் அரசனுக்குக்கூறி அதற்காவன செய்யுமாறு வேண்டினர். அரசனும் அதற்கு இசைந்து, பலதூதர்களைத்தூரன், கிரீசு, இந்தியா முதலிய நாடுகளுக்கு அனுப்பி அவத்தா கொள்கைகளை விளக்கச் செய்தான். பெரு முயற்சி செய்தும் வெளிநாடுகளில் இக்கொள்கையைப் பின்பற்றுபவர்கள் அதிகமாக இல்லை. சோராத்சருக்கு வயதும் அறுபதாகிவிட்டது. தான் உயிருடனிருக்கும்பொழுதே அவத்தா கொள்கைகளை எங்கும் பரப்பிவிட வேண்டுமென்பது அவர் விருப்பமாகும். மத தூதர்களினுல் முடியாததைப் போர் வீரர்களினுல் முடிக்க எண்ணினர். ஈரான்நாடு தூரன் நாட்டினிடம் கடன் வாங்கி இருந்தது. கடனைத் திரும்பக்கேட்டபொழுது சோராத்சரின் விருப்பத்திற்கு இணங்க ஈரான் அரசன் கடனைக் கொடுக்க ஒரு நிபந்தனையைக் கூறினுன். தூரன்நாடு அவத்தா

கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சோராத்சரைத் தேவதூதனாகக் கருதவேண்டும் என்பதே கடனைத் திரும்பக் கொடுப்பதற்கான நிபந்தனையாகும்.

இதைக் கேட்ட தூரன் அரசன் மிகச் சினங்கொண்டு வாங்கிய கடனை ஆண்டவனின் பெயரால் திரும்பக் கொடுக்க மறுப்பவர்கள் நாளை அதே ஆண்டவனின் பெயரால் நமது நாட்டையும் கொள்ளைகொள்ள முற்படுவர். ஆகவே இப்பொழுதே போர் தொடுக்கவேண்டுமென்று ஈரான் நாட்டின்பேரில் படையெடுத்துச் சென்றான். இரு நாட்டினரும் கடுமையாகப் போரிட்டனர். முடிவில் ஈரான் வெற்றியுற்றது; தூரன் தோல்வியுற்றது. ஈரானிய மக்கள் சோராத்சரை வாயாரப் புகழ்ந்தனர்; தூரன் மக்களோ அவரை மனதாரத் தூற்றினர்.

பழி வாங்குவதற்காகத் தூரன் நாட்டினர் 17–ஆண்டுகள் பொறுமையுடன் திட்டமிட்டு வந்தனர். மறுபடியும் போர் மூண்டது. தூரன் மக்கள் வீரத்துடன் போர் புரிந்து ஈரான் படைகளை முறியடித்தனர். கோட்டைகள் தகர்க்கப்பட்டன. அந்நேரத்தில் சோராத்சர் ஈரான் வெற்றிக்காக ஒரு கோவிலில் சுடரை வழிபட்டுக்கொண்டிருந்தார். தூரன் படைவீரன் ஒருவன் உள்ளே நுழைந்து சோராத்சரின் முதுகில் கத்தியால் குத்திவிட்டான். தேவதூதர் சோராத்சர் உயிர்நீத்தார். அவர் வணங்கிய சுடர் எரிந்துகொண்டிருந்தது.

சோராத்சரின் படுகொலையை பழிவாங்க வேண்டுமென்று ஈரான் அரசன் விசுத்தாப்பர் பெரும் படை திரட்டித் தூரன் மேற் படையெடுத்து முறியடித்தான் சோராத்சரின் மதத்தைத் தூரானியர் ஏற்றுக் கொள்ளும் வரை அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளும் பேச்சே கிடையாது என்று கூறிவிட்டான். துரானியரும் அடிபணிந்தனர். இவ்வாறு சோரர்த்சரின் மதம் தூரன் நாட்டில் பரவியது. பிற அண்டைய நாடுகளுக்கும் சமயகுருக்கள் அனுப்பப்பட்டனர்.

ஆண்டுகள் பல ஆக ஆக சோரத்சரின் மதக் கொள்கைகளும் பல வகையில் மாறு பட்டுவந்தது. ஈரானியர் சோராத்

சரின் மதத்தைப் பின்பற்றத் தொடங்கினாலும் அவர்களுடைய பழைய உருவ வழிபாட்டை முற்றிலும் கைவிட முடியவில்லை. பழைய உருவங்களுக்குப் புதுப்பெயர்களை வைத்து வழிபட்டனர். இது முற்றிலும் சோராத்சரின் கொள்கைகளுக்கு முரண்பட்டது. ஆண்டவன் உருவமற்றவர் என்ற கருத்தைப் பரப்பிய பெருமை சோராத்சரைச்சாரும். அவருடைய சமயத்தின் சில முக்கிய கோட்பாடுகள்:-

(1) எண்ணம், சொல், செயல்களில் தூய்மை,

(2) புறத்தூய்மை

(3) அறஞ்செயும்மனம்

(4) பயனுள்ள மிருகங்களிடம் அன்பு காட்டல்

(5) பயனுள்ள தொழில் செய்து ஏழைகளுக்குப் படிக்க உதவுதல்,

முன்னூறு ஆண்டுகளுக்குப் பின் பேரரசன் அலெக்சாந்தர் அந்நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான். நாட்டைக்கைப் பற்றினான். சோராத்சர்சமயத்தை அகற்றித்தன்னுட்டுச் சமயத்தைப் புகுத்தினான். மக்கள் வெளிப்படையாக அதை ஏற்றுக்கொண்டாலும் மறைவாக சோராத்சர் சமயத்தையே பின்பற்றி வந்தனர். பல ஆண்டுகளுக்குப்பின் நாடு விடுதலையடைந்து மறுபடியும் சோராத்சர் சமயம் தோன்றி வளர்ந்தது. புதியசுடர்க்கோவில்கள் நாடெங்கும்கட்டப்பட்டன. அக்கோவில்களில் அல்லும் பகலும் சுடர் எரிந்துகொண்டிருக்கும். மக்கள் அதையே தெய்வமாக வணங்கினர்.

நானூறு ஆண்டுகளுக்குப் பின் அராபியர்கள் பெர்சியா என்று விளங்கும் ஈரான் நாட்டின்மேல் படையெடுத்தனர். முகமதுவின் சமயத்தை அவர்கள் கத்தி முனையில் அந்நாட்டில் நுழைத்தனர். சோராத்சர் சமயத்தை விட்டுப் புதிய சமயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் வாளுக்கு இரையாயினர். அதற்கு அஞ்சி உயிரைக் காப்பதற்காக நாட்டை விட்டுப்பலர் ஓடினர்.

இஃது இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. ஈரான் நாட்டை விட்டு அவ்வாறு ஓடி வந்தவர்கள் இந்தியாவில் குடியேறினர். அவர்களே இன்று பார்சிகள் என்று வழங்கப்படுபவர்கள்.

பார்சிகள் தங்களுடைய சமயமே உலகில் சிறந்த சமயம் என்று நம்புகின்றார்கள். அவர்கள் சமயத்தை மற்றவர்களுக்குப் போதிப்பதில்லை, மற்றவர்கள் அவர்கள் சமயத்தைத் தழுவ விரும்பினாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பிறப்பினாலேயே ஒருவர் சோராத்சர் சமயத்தைச் சார்ந்த பார்சியாக விளங்கமுடியும். இன்று ஏறக்குறைய உலகில் இலட்சம் மக்கள் சோராத்சர் சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர்.

(தொடரும்)

சங்கச்செய்திகள்:

தனித் தமிழ்த் தேர்வின் முடிவுகள்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு (1959-பிப்ரவரி) 1990-பங்குனித்திங்களில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற தனித் தமிழ் நுழைவு, இளம்புலவர், புலவர் ஆகிய வகுப்புத் தேர்வுகளின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நுழைவு

முதல் வகுப்பு:-

1. மா. மாரியம்மாள்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

இரண்டாம் வகுப்பு:-

3. சே. அம்புஜம்
4. சு. சுசீலா
5. க. சரோஜா
7. இந்திராணி எலிசபெத்
9. ரா. லெட்சுமி
11. பா. பத்மா
15. மு. முனியாண்டி
128. பொ. செ. செம்பா கவுண்டன்
129. கா. சுந்தரம்
131. மு. பொன்னம்மாள்

} செந்தமிழ்க் கல்லூரி மதுரை

21. உ. பொ. சுப்பிரமணியன்
பிரிமியர் நூலாலை
பூலாங்கிணர் (அஞ்சல்), உடுமலை வட்டம்
கோவை மாவட்டம்.

மூன்றாவது வகுப்பு:-

2. மு. வத்சலா
8. மீ. உலகம்மாள்
10. மு. கமலம்
12. அ. வேதமணி
14. சி. ரா. சாரநாத்
16. சே. பாண்டியன்
17. கா. இராமசாமி

} செந்தமிழ்க் கல்லூரி மதுரை

20. சு. இராசேந்திரன்
வடக்குத் தெரு,
திருவாடானை அஞ்சல், முகவை மாவட்டம்.

22. வெ. கோபால்சாமி, பிரிமியர் நூலாலை,
பூலாங்கிணர் அஞ்சல், உடுமலை வட்டம்

27. வே. கந்தையா பிள்ளை, ஆசிரியர்,
கழக தொடக்கப்பள்ளி,
சிக்கல் (P. O.), வழி. முதுகுளத்தூர்

28. M. ஜார்ஜ்
30. D. இராஜதங்கம்
31. ஸ்டெல்லா ஹெப்ஜிபா
32. A. சொர்ணுபாய்
33. S. பவதாரணி
34. A. ரமணி
40. ந. இராசாபாதர்

(மே/பா வித்வான் ப. தாமஸ் வடக்குத்தெரு நெய்யூர் குமரிமாவட்டம்)

48. A. லீனூஸ்
49. ஜி. செம்பகம்
57. M. சிவசாமகிருஷ்ண நாடார்
58. சுபத்திர அம்மை
59. A. மரியலங்காரம்
60. A. பொன்னையன்
130. பொ. இராசாமணி

(மே/பா C. தேவகி அம்மா, மேலாளர் தமிழ்க்கலை நிலையம் முஞ்சிறை குமரி மாவட்டம்)

இளம் புலவர்

முதல் வகுப்பு

78. அ. வே. மங்கலேசுவரி
20, பூக்காரத் தெரு,
வடக்கு ஆவணிமூலவீதி, மதுரை.

79. கா. தெய்வேந்திரன்
100. கோ. பா. தாமரை

(செந்தமிழ்க் கல்லூரி, மதுரை)

இரண்டாவது வகுப்பு

62. சி. ரங்கஜானகி
70. மா. கருப்பன்

(சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர்)

94. து. பொன்னுசாமி
99. ஆ. முனியம்மாள்
116. S. ஆதீனமிளகி

செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

மூன்றுவது வகுப்பு:-

63. ம. சரஸ்வதி
64. சி. சுந்தரமணி
65. வ. செல்லமுத்து
71. சி. சிவக்கொழுந்து
74. தே. ப. சின்னுச்சாமி
75. இரா. திரிபுராம்மாள்

சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி பேரூர்

79. சு. இராமச்சந்திரன்
2, பேச்சியம்மன் கோவில் தெரு, மதுரை

80. வெ. கோபாலன்,
2, பேச்சியம்மன் கோவில்தெரு, மதுரை.

82. க. பொ. நடராசன், ஆசிரியர்,
காளிகோவில் தெரு, உசிலம்பட்டி.

83. சு. செல்லப்பன், ஆசிரியர்,
கீழமறவன்குடியிருப்பு (அஞ்சல்),
குமரி மாவட்டம்,

86. பொ. தங்கப்பன், சரல் (அ. நி)
நாகர்கோவில் (வழி)

88. N. பகவதீஸ்வர ஐயர், ஓவிய ஆசிரியர்,
V. M. C D. U. உயர்நிலைப்பள்ளி,
தாயம்பாளையம் அஞ்சல்,
கோவை மாவட்டம்.

90. மு. பெருமாள்,
36. காந்தி வீதி,
சென்னைபட்டினத்துப் பாலம்; புதுவை;

93. பெ. கு. மாணிக்கம்
95. ச. ல. சீனிவாசன்
97. மு. பிச்சாண்டி
117. க. இராமச்சந்திரன்

செந்தமிழ்க் கல்லூரி மதுரை

123. நா. தாணுமாலையப்பெருமாள் பிள்ளை,
தெற்குப்பள்ளத்தெரு,
தாழக்குடி அஞ்சல்,
குமரி மாவட்டம்

புலவர் தேர்வு

முதல்வகுப்பு: இல்லை.

இரண்டாவதுவகுப்பு:

101.	அ. மணவாளன்	சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி பேரூர்
109.	ஆ. முருகேசன்	

114. கரு. மாணிக்கவாசகன்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

மூன்றாவதுவகுப்பு:

104. K. நகுலராஜ்,
எண்ணம்பட்டி
பாப்பாரப்பட்டி (P. O.)
தர்மபுரிவட்டம்

107. S. G. சுப்பிரமணியபிள்ளை,
காந்தாரி அம்மன்கோவில்தெரு.
புத்தான் சந்து
திருவனந்தபுரம்

108. மு. இராமலிங்கம்
ஒண்டிமுத்துமேஸ்திரிசந்து,
தெற்கு வெளிவீதி
மதுரை.

110.	இரா. சுப்பிரமணியன்	சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி பேரூர்
111.	பு. ந. இராமசாமி	
112.	ம. பார்த்தசாரதி	
113.	மு. உலகநாதன்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை.
115.	லில்லி புஷ்பம்	

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை
11—6—1959

கி. பழநியப்பன்,
தேர்வு அமைப்பாளர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நூல்கள் விற்கப்பெறும்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கஞநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினர்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரு. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரு. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.